ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத சந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

आपत्स्वपि च कष्टासु परस्वं कामयेत न ।
नाभक्ष्यं भक्षयेत्कचित् नापूर्वं चरितं चरेत् ॥

மிகக்கொடிய விபத்துக்கள் நிகழ்வுற்றாலும் அதிகமான வறுமையை அனுபவிக்க நேர்ந்தாலும், பிறர் பொருளை விரும்புதல் தகாது. புசிக்கத்தகாத பண்டங்களை சாப்பிடுவதும் கூடாது. புதிது புதிதான அனுஷ்டானங்களையும் அனுஸரித்தலாகாது. நமக்கு எத்தகைய இடுக்கண்கள் நிகழ்ந்தபோதிலும், அவற்றை விலக்கவேண்டி, ஆபத்காலத்தில் எதைச் செய்தாலும் தோஷமில்லையெனக்கருதித் தீதான வழிகளில் பிறர் பொருளை இச்சிப்பது முற்றிலும் தவறு.

சாஸ்திரங்களாலும், அநுஷ்டானங்களாலும், எவ்வெவைகள் சாப்பிடக்கூடியவைகளென்றும், எவைகள் தகாதவையென்றும் அறியப்படுகின்றதோ, அவ்விதமே விலக்கவேண்டியவற்றை விலக்கி, புசிக்கத்தகுந்த வஸ்துக்களையே புசிக்கவேண்டுமேயல்லாது, கேவலம் நம் யுக்தியைக்கொண்டு அவ்வாறு செய்தல் தோஷமில்லையென நினைத்து, கீழ்க்குறிப்பிட்ட சாஸ்திரப்பிரமாணங்களுக்கு முற்றிலும் மாறாகவும் விரோதமாகவும் விலக்கவேண்டியவைகளை நாம் உபயோகப்படுத்திக்கொண்டு பாபத்திற்குள்ளாவது என்ன பேதமை! நான்கு ஆச்ரமங்களுக்கு முறையே எந்தெந்த தருமங்கள் சாஸ்திரங்களாலும் அநுஷ்டானங்களாலும் நன்கு போதிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றனவோ, அவைகளை செம்மையாய் கடைப்பிடித்தொழுகாமல் அதர்மங்களையே முக்கிய தருமங்களெனக்கருதி அவற்றைப் பின்பற்றல் வேண்டுமென வற்புறுத்துவோர்களின், மனத்துணிபும், ஸாஹஸப்பிரவர்த்தியும் தவறெனக் கூறவும் வேண்டுமோ?

நமது தர்மம்.

35. நான்குவர்ணத்தாரும் பணத்தையும் கௌரவத்தையும் கண்டு ஏமார்ந்து போகாமல் தங்கள் தங்களின் சிறப்பு தர்மங்களே தமக்கு சரணமென்று தைரியத்துடன் நடந்து வருவார்களாயின் அதனால் அவர்களுக்குக்கிடைக்கும் பலன் யாது?

ஈசுவரன் அநுக்ரஹம் பூர்ணமாய் உண்டாகிறது. அந்த ஈசுவரன் ஒருவனே சிவன் என்றும், விஷ்ணுவென்றும், அம்பிகையென்றும், கணபதி என்றும் குமாரன் என்றும் பக்தர்கள் எந்தவிதம் உபாஸிக்கின்றனரோ அந்தவிதமாகவே அவர்களுக்கநுக்ரஹிக்கிறார்.

35. மற்றும் இம்மூர்த்திகளுடைய உபாஸனமுறையை விசேஷித்துக்கூறும் நூல்கள் எவை?

சிவபெருமானுடைய உபாஸனையை இதிஹாஸமான சிவரகஸ்யமும் சிவபுராணங்கள் பத்தும் காமிகம் முதலிய இருபத்தெட்டு சிவாகமங்களும் கூறுகின்றன. விஷ்ணுவின் உபாஸனையை விஷ்ணுபுராணங்களும் பாஞ்சராத்ரமெனும் ஆகமமும் கூறுகின்றன, அம்பிகையுபாஸனையை, தேவிபாகவதம் முதலிய புராணங்களும், அறுபத்துநான்கு சக்தி தந்திரங்களும் கூறுகின்றன. கணபதியின் உபாஸனையை, காணபதபுராணங்களும் தந்திரங்களும், குமாரஸ்வாமியுபாஸனையை சங்காஸம்ஹிதை

முதலான புராணங்களும் ஸூர்யோபாஸனேயை ஸௌரபுராண மும் கூறுகின்றன.

37. இந்தஆறுமதங்களேயும் உத்தாரணம் செய்து இக் கலியுகத்தில் ஸ்தாபித்தது யார்?

ஈசுவரனே, தேவதைகளால் பிரார்த்திக்கப்பட்டு ஸ்ரீ சங்க ரர் என்னும் நாமதேயத்துடன் ஸந்யாஸாச்ரமம் தரித்து, வைதி கமதத்தைநிலேநாட்டி, ஜீவர்களுக்கு ஆத்மஸ்வரூபத்தை யறி விக்க அறுசமயங்களுக்கும் ஒரே ஜகத்குருவாய் விளங்கிய நமது பகவத்பாதாசார்ய மூர்த்திகளே.

38. அவ்வாசார்ய மூர்த்திகளால் விளக்கப்பட்ட வை திகதர்மம் என்றும் நிலேபெற்றிருக்குமாறு, எவ்வித ஸ்தாபனம் செய்திருக்கிறார்கள்?

தமது முப்பத்திரண்டுவயதுக்குள் இப்பரதகண்டமுழுதும் அநேகந்தடவை ஸஞ்சாரம்செய்து, அநாசாரங்களே விலக்கி ஆன் மாக்களேயநுக்ரஹித்து தனது ஸ்தானமான கைலாஸ சிகரம் போய் உத்தமமான ஐந்து ஸ்படிகலிங்கங்களேக் கொண்டுவந்து, தனது பூஜைக்காக யோகலிங்கம் என்னும் சந்திரமௌளீசுவர ரைவைத்துக்கொண்டு மற்ற நான்குலிங்கங்களில், நேபாளத்தில் ஒன்றும், சிதம்பரத்தில் ஒன்றும், சிருங்ககிரியில் ஒன்றும், பதரி காசிரமத்தில் ஒன்றுமாக பிரதிஷ்டை செய்தார்கள். இதைத் தவிர பதரிகாசிரமத்தில் ஜ்யோதிஷ்மதீ பீடத்தையும், சிருங்க கிரியில் சாரதாபீடத்தையும், துவாரகையில் காளிபீடத்தையும் ஸ்தாபித்து இந்நான்கிடங்களிலும் தமது சிஷ்யர்களுள் நால் வரை நியமித்தார்கள். பிறகு முக்திநகரமான காஞ்சிநகரத்தை யடைந்து அந்நகரத்தை ஸ்ரீ சக்ரயந்திரரூபமாகவமைத்து அதன் மத்தியஸ்தானத்தில் ஸ்ரீ காமகோடி பீடத்தை ஸ்தாப னம் செய்தார்கள். இன்னும் அந்நகரில் சிவவிஷ்னுவாதி தே வாலயங்கள் எல்லாம் அப்பீடத்தையே நோக்கியமைந்திருப்ப தோடு தங்களுடைய உத்ஸவகாலங்களில் காமகோடி பீடத்தை

யே ப்ரதக்ஷிணம் செய்துவருகின்றன. இந்த ஸ்ரீ காமகோடி பீடத்தின் ஸந்நிதானத்தில் பகவத் பாதாசார்யாள் ஸர்வக்ஞ பீடமேறித்தம்மால் நிலைநாட்டப்பட்ட தர்மத்தைக் காக்கும் பொருட்டு தமது பிரதான சிஷ்யாளான ஸுரேசுவராசார்யாளை ஷை காமகோடி பீடத்திற்கதிபதியாக ஸ்தாபித்துவிட்டு தமது ஸ்வஸ்தானமான கைலாஸகிரியையடைந்தார்கள்.

ஆதலின் ஈசுவரமூர்த்தியும் குருமூர்த்தியும் ஒன்றாகவமைந்த நமதுபகவத்பாதமூர்த்தியிடம் இருபக்தியும் ஒன்றுசேரச் செய்து அவர்களது ஆக்ஞையான சாஸ்திரத்தை யதாசக்தி யநுஷ்டித்து நாம் ஸம்பூர்ணமான க்ஷேமத்தையடைவோமாக.

உ

இன்பம்.

स उत्तमश्श्रेयसमाशु गच्छत्यसारसंसार निवर्तिताशः ।
यः कर्मणा भक्तिमवाप्य तस्मात्ज्ञानं च लब्ध्वा समतामुपैति ॥

(இ. ள்.) எவன் மறையின் மர்மங்களை நன்குணர்ந்து விதிவழுவாதொழுகுவதால் பக்தியைக் கைப்பற்றி அதனால் நேரிடும் ஜ்ஞானத்தால் மன்னுயிரைத் தன்னுயிராகக் கருதுகிறானோ அவன் ஸம்ஸார பாசத்தினின்றும் விடுபட்டு வெகுவிரைவில் மோக்ஷத்தை அடைகிறான்.

உலகத்தில் இன்பத்தை உத்தமம், மத்யமம், அதமமென்னும் பேதத்தால் மூன்று விதமாகப் பிரிக்கலாம். அவற்றுள் உத்தமமான இன்பமே மோக்ஷமெனப்படும். அந்த மோக்ஷமா

னது நம்மவராலெளிதிலடைய முடியாதெனினும் ஐயந்திரிபற ஐம்பொறியடக்கிய துறவிகளால் மிக சுலபமாயடையத் தக்கது. சிரேயஸ்ஸும் பிரேயஸ்ஸும் ஸதாபுருஷரைக் கட்டுப் படுத்துகின்றன. அவற்றுள் சிரேயஸ்ஸாற் கட்டுப்படுகிறவர் முக்தரேயாவர். அவர்கள் குறிப்பான நீதிநெறிகளைக் கற்றுணர்ந்து ஜனன ஜரா மரண ஸம்பந்தமான உலகவாழ்க்கையில் வெறுப்புற்று ஸதா யாகாதி க்ரியைகளைப் பலாபேட்சையன்றி செய்வதால் தம்மைக்கட்டுப் படுத்துகிற சிரேயஸ்ஸாலேயே கட்டுண்டு தன்னுயிரைப்போல் மன்னுயிரைப் பாவிக்கும் புண்யபுத்தி பரிபாகத்துடன் பிரேயஸ்ஸை விலக்கிவிடுகின்றன. ஆதலாற்றான் அவர்கள் கண்களாலறியமுடியாததாயும் கூடமான ஸ்தலத்தைப் பிரவேசித்ததாயும் இருக்கும் அந்த பிர்மஸ்வரூபத்தைக் கைப்பற்றி சுகதுக்கங்களை இழந்து எந்த ஸ்தானத்தை எல்லா வேதங்களும் தவங்களும் மேன்மையாகச் சொல்லுகின்றனவோ, யாதொன்றிலாசையுற்ற முனிவர் பிர்மசர்யத்தை அநுஷ்டிக்கின்றார்களோ, அப்பேர்ப்பட்ட அம்மேன்மைப் பதவியை அடைந்ததால் அவர்கள் மறுபிறவியற்ற நித்யர்களாயும் சாச்வதர்களாயும் புராணர்களாயும் ஒன்றினாலும் கொல்லப்படாதவர்களாயும், ஒன்றையும் கொல்லாதவர்களாயுமிருந்துகொண்டு, வடமொழியிலுள்ள குமாரஸம்பவமென்னும் நூலினாசிரியரான காளிதாஸர் தன்னூலில்,

“ आत्मानमात्मन्यवलोकयन्तं ”

எனக்கூறியவண்ணம் ஆத்மஸ்வரூபத்தை அறிவதிலேயே கருத்தும் கண்ணாகவுமிருக்கின்றனர். உத்தம மாணாக்கர் இடைமாணாக்கர் கடைமாணாக்கராகிய மூவருள் உத்தமமாணாக்கரையே குறித்த மோக்ஷ சுகத்தைக் கைக்கொள்வதில் ஸமர்த்தரெனக் கூறலாம். இதற்கு கடோபநிஷத்தில் வரைந்திருக்கும் நசிகேதோபாக்கியானமே சரியான நிதர்சனமாகும்.

நசிகேதஸ் என்பவர், தன் தந்தையான வாஜச்ரவஸான வர் யாகத்தில் எல்லாவற்றையும் தக்ஷிணையாகக் கொடுக்குங் கால் தந்தையிடம் சென்று "என்னையாருக்கு தானம் செய்யப் போகிறீர்" எனப்பன்முறை வற்புறுத்திக்கேட்டதும் சினம் கொண்ட தந்தை உன்னை கூற்றுவனுக்கு தானம் செய்யப்போ கிறேனென்றனர். உடனே நசிகேதசும் "என்னால் யமனுக்கு என்ன உபகாரம் செய்யமுடியும்" என்று தந்தையிடம் கூறி நான்கு இரவுகளாக யமகிருஹத்தில் உபவாஸமிருந்தனன். இதனை அறிந்த தர்மராஜரும் அதிதிகளுக்குரிய பூஜைகளைச் செய்து "ஓ நசிகேதஸே! மூன்று இரவுகளாக இங்கு உபவாஸ மிருந்ததால் மூன்று வரங்களைக்கேட்டுக்கொள்ளும், தருகிறேன் அங்ஙனமில்லையேல் என் தர்மம் குன்றிவிடும் அதனால் தர்மரா ஜரென்ற பெயரும் மாறிவிடுமெ"ன்று கூறியதால் நசிகேதசும் ஸாமான்யமான இரண்டு வரங்களைப் பெற்றுக் கொண்டு அதன் பின்னர், ஆத்மஸ்வரூபத்தைப் பற்றி தேவரீரெனக்குத் திரு வாய்மலருவதே மூன்றுவதுவரமெனக் கூறினான். இதனைக் கேள்வியுற்ற தர்மராஜர் ஓ நசிகேதஸே! தேவர்களும் இவ் விஷயத்தில் விவாதம் செய்து ஐயம் கொள்ளுகின்றனர். அங் ஙனமிருக்க என்னாலெவ்விதமறியமுடியும்? ஆதலால் மற்றொரு வரத்தைக் கேட்டுக்கொள்ளும் தருகிறேன் என்றார். இம்மொ ழிகளைச் செவியுற்ற நசிகேதஸ் தேவரீர் யாது காரணத்தால் தேவர்களுமிவ்விஷயத்தில் சந்தேகின்றனரோ அதுகொண்டே இவ்விஷயம் மிக அரியரஹஸ்யமுளதென விளங்கின்றது. அன்றியும் இதற்குச் சமமான வரம் யாதொன்றுமில்லை, இவ் வாத்ம ஞானத்தைக் கசடறக் கற்றுக்கொடுப்பதற்குரிய ஆசிரி யர் தாங்களே என்றார். ஆயினும் சிஷ்யபாவத்தை வகிப்பவரின் சித்தத்தைப் பரிசோதிப்பதே பெரியோரின் கடமையாதலின் இன்னும் சிலவார்த்தைகளைக் கூறுவதாயினர். அதாவது ஓ நசிகதஸே? சிரஞ்சீவிகளான புத்ர பௌத்ரர்களை வரமாகக் கேட்டுக்கொள்ளும். அன்றேல் ஏராளமான பசுக்களையும் குதி ரைகளையும், வண்டினம் மொய்க்க மதம் பொழியும் யானைகளை

யும், வெற்றிக்கொடியுற தேர்களையும் காலாளர்களையும் பொற்குடையால் அழகுற ஒற்றைக்குடையையும், ஏராளமான இரத்தினங்களையும் கேட்டுக்கொள்ளும். இல்லையேல் இவ்வையகத்தில் உமக்கு எவ்வளவுகாலம் ஜீவித்திருக்கப் பிரியமிருக்கின்றதோ அவ்வளவு காலம் தங்கள் இஷ்டப்படி போக பாக்கியங்களைப் பெற்றுக்கொண்டு ஏனையமனிதரால் பொறுமைப் படத்தக்க செல்வத்துடனும் காளைப்பருவத்துடனும், ரம்பை முதலியவரால் நேரிடும் அரிய மதனமஹோமிருத ஜால விநோதத்தினலாதரிக்கப்படும் வரத்தைக் கேட்டுக்கொள்ளும். இவையல்லாது தாங்கள் கருதும் நோக்கமானது மிகக் கடுமையுற்றதாதலின் எம்மாவியலாதென்றார். ஆதல்பற்றியே வாட்டமும் தர்மராஜரைப் பிரதட்சிணம் செய்வதில் நாட்டமுமுற்ற நசிகேதஸ் ஓ தர்மராஜரே! என்னை வீணாகப் பரிசோதிக்கவேண்டாம் இவ்வாத்மக்ஞானத்தையறியும் விஷயத்தில் தங்களையே தஞ்சமடைந்தேன். தாங்கள் கூறிய எல்லா சுகங்களும் ஜராமரணத்தால் பீடிக்கப்பட்டவை. ஆதலால் அற்பமான இவ்வுயிரை யான் விரும்பினவனல்லன். நவத்வாரங்களுற்ற இச்சரீரத்தில் உயிர் இருப்பது ஆச்சர்யமேயல்லாது துறப்பது ஆச்சர்யமன்று. தேவஸ்திரீகளின் ஆடல்பாடல்களும் இன்னும் தாங்கள் கூறிய ஏனையதும் தங்களுக்கே இருக்கட்டும். எவ்வளவுகாலம் நான் ஜீவித்திருக்கவேண்டுமென்று தாங்கள் கருதுகிறீர்களோ அவ்வளவுகாலம் யானுயிருடன் இருந்தால் போதும். ஆதலால் தமது மலரடியிற் தஞ்சமடைந்த தமது பக்தனைக்கொஞ்சம் காத்தருளி திருவாய் மலரவேண்டுமென்று மிக்க வணக்கத்துடன் பிரார்த்தித்துக்கொண்டதால் அந்த அகண்ட பரிபூரண ஸச்சிதானந்த பிர்மஸ்வரூபத்தை அரியமொழியுடன் பக்தனை நசிதகேசுகிக்ணங்கிக் கற்பித்து அதனாலவரை ஸதா மோட்சலக்ஷ்மியாலாதரிக்கப்படும்படி செய்தார். ஆதலாலிவர்போன்றவரை உத்தமமாணாக்கரெனக் கூறத் தடையொன்றுமில்லை,

நேயர்களே! உலகத்தார் பழிக்கும் உக்ரகிருத்யங்களை உடைய இலங்கை வேந்தன், இரண்யகசிபு. தாரகன் முதலிய அரக்கர் முற்பிறப்பில் மோக்ஷத்திற்குரிய யாவற்றையும் கைப் பற்றி மோக்ஷத்தை அடைவதற்காக மாத்ரம் மறுபிறவியுற்றவர், ஆதலாற்றான் அவர்கள் ராக்ஷஸப் பிறவியில் வேதங்கள்கூறும் கர்மாக்களையனுஷ்டியாது மோக்ஷத்தைக்கைப்பற்றினர். மறை யின் மர்மங்களை நன்குணர யோக்யதையற்ற இறைச்சி தின் னும் பறையனான நந்தனுக்கும், கண்ணப்பநாயக்கருக்கும் எங் ஙனம் மோக்ஷம் ஸம்பவித்ததெனின், மோட்சத்தை அடைவ தற்கு ஜாதிவ்யத்யாஸம் காரணமெனினும் அம்மோக்ஷத்தை அடைவதற்குரிய ஞானமானது ஜாதிவ்யத்யாஸத்தைப் பெரி தும் பாராட்டாது. ஆதலாற்றான் வேதியகுலத்தில் ஜனித்தி ருப்பவரும் மோட்சத்தைக் கைப் பெறுவதற்குரிய ஞானத் தை யடையாது பாபகிருத்யங்களால் கீழான ஜாதியை அடை கின்றனர். தாழ்மையான ஜாதியில் பிறந்திருந்தும் கண்ணப் பன் நந்தன் முதலியவர் வேதார்த்தங்களை நன்குணர்ந்த சிஷ் டர்களின் ஆசாரத்தை அனுசரித்தும் தம்முடைய ஜாதியாசா ரத்தை நழுவவிடாமலிருந்து ஞானத்தை கைப்பற்றியதாலும் மோக்ஷத்தையடைந்தனர். நந்தன் முதலிய தொண்டர்களுக்கு அக்னிப்பிரவேசம் செய்ததின் பின்னர் மோக்ஷம் கிடைத்தது பற்றியே மோட்சத்திற்கு ஜாதிவ்யத்யாஸம் காரணமென நிச் சயமாய் கூறலாம். இனி மத்யமமான இன்பத்தைப் பற்றிக் கொஞ்சம் கூறுவோம்.

संसारसौख्यं परमेव मत्वा यः प्रेयसा बद्धमनोऽभिषङ्गः ।
इहेत्य किंचित्ससुखंचदुःखं पुनर्वशं यास्यति सोऽन्तकस्य ॥

(இ. ள்.) எவன் ஸம்ஸாரசுகமே மேன்மை சுகமெனக் கருதி ஸம்ஸார பாசத்திற்குட்படுகிறனே அவன் சிற்றின் பத்துடன் கூடிய துக்கத்தை இப்புவியிலடைந்து மறுப டியும் யமனுக்கு சுவாதீனனாகிறான்.

"இல்லறமல்லது நல்லறமன்று" என்று ஔவையார் கூறியவண்ணம் இல்லறமானது தர்மங்களை ஸம்வர்தனம் செய்யவோர் நல்ல கருவியாகவிருக்கின்றது. அதாவது நான்கு வர்ணத்தாருள் கிருஹஸ்தர்களே மற்றவர்ணத்தாரின் ஸம்ரட்சணையின் பொருட்டு ஏற்பட்டிருக்கின்றனர். அது கொண்டே கிருஹஸ்தாசிரமமானது எல்லா ஆசிரமத்திற்குள் சிரேஷ்டமானதென்று ஸ்மிருதிகள் கூறுகின்றன. துறவறத்தால் சித்திக்கும் மோட்சத்தை இல்லறத்தாலும் அடையலாமென ஸ்வாமி விவேகாநந்தர் தமதுபன்யாஸத்தில் கூறியுள்ளார்—"இல்லறத்தை அனுஷ்டித்துவரும் ஸ்திரீபுமான்களாகிய இரண்டு பறவைள் தாம் கூடு கட்டி வஸிக்கும் மரத்தண்டையில் இருவர் பசியால் வருந்துவதைக்கண்டு அவர்களின் பசியை ஆற்றிவைக்கும் வண்ணம் தன்மூக்கினால் சிறுகுச்சிகளை கீழேபோட்டதால் வந்தவழிப்போக்கர் தனக்கு நேரிடும் பனியின் பாதையை விலக்கத் தீயை வளர்த்துக்கொண்டு இருக்கும் கால் கிரமமாக ஆண்பறவையும் பிறகு பெண்பறவையும் அதன் பின் குஞ்சுகளும் தீயில் விழுந்து வந்தவர்களின் பசியை ஆற்றிவைத்ததால் அப்பறவைகள் பரமபதத்தை அடைந்தன" என்னும் மொழிகளால் நன்கு விளங்குகிறது. அன்றியும் அறிவயர்கு அரியதோர் அணியான கற்பணயால் பணிந்து தென்திசையார் திருஷ்டியிற்புலப்படாமலிருக்கும்வண்ணம் தன் நாதனே தெய்வமெனக்கருதியிருக்கும் அனேகம் வனிதாரத்னங்களைப்பரீட்சிக்கும் பொருட்டு வந்தபகவான் அவ்வங்கனைகளுக்கு மோட்சத்தை அளித்திருக்கிறார். இல்லறத்தை அனுஷ்டியாதமானிடர்,

अस्मात्परं बत यथाश्रुति संभृतानि
को नः कुले निवपनानि करिष्यतीति ।
नूनं प्रसूतिविकलेन मया प्रदेयं
धौताश्रुशेषमुदकं पितरः पिबन्ति ॥

என்று கவிகோகிலரான காளிதாஸர் கூறியவண்ணம் மக்களில்லாக்குறையால் நேரிடும் பிதுருக்களின் கொடிய சாபத்திற்

குள்ளாகிறார்கள். ஆகவே இல்லறத்தை நாம் விதிப்படி அனுஷ்டித்தால் மோட்சத்தைக் கைக்கொள்ளுவதிலேயமில்லை. அஃதன்றி கேவலம் விஷயசுகங்களுக்காக மாத்திரம் இல்லறத்தை அனுஷ்டிப்பவரைப் போல் நடிப்பவர் அடிக்கடி ஜனனமரணங்களுக்குள்ளாகிறார்கள். ஆயினும் இல்லறத்தை மத்யமமான இன்பமென்க் கூறுவதின் கருத்தாவது,

बालस्तावक्रीडासक्त स्तरुणस्तावत्तरुणीसक्तः ।
वृद्धस्तावज्जरयासक्तः परमे ब्रह्मणिकोऽपि न सक्तः ॥

என்று ஸ்ரீ சங்கராச்சாரியாள் கூறியபடி ஒவ்வொரு மனிதரும் தம்முடைய பால்யவயதில் விளையாட்டாலும், காளைப் பருவத்தில் மங்கயராலும், முதிர்ந்தவயதில் கிழட்டுத்தன்மையாலும் வ்யாபிக்கப்படுவதால் பெரும்பாலும் பரம் பொருளை அறிய ஒருவராலுமியலாது. இங்ஙனமிருக்க ஸம்ஸார பாசத்தால் கட்டுப்படுகிறவர் எவ்விதத்திலும் துயரத்தை அடைகிறார்களெனக் கருதியே இல்லறத்தை இடையின்பமென்று கூறினோம். நேயர்களே? ஆசாபாசமென்பது லேசானதா. மநுஸ்மிருதி முதலிய நூல்களில், छन्नं दुहितृविक्रयम् என்று, விவாஹங்களில் பணத்தை வாங்களுக்குக்கொடுப்பதானது ரஹஸ்யமாகத்தான் மக்களை விற்றது போலாய் விடுகின்றதாகக் கூறியிருக்கின்றன. தென்னாட்டிலுள்ள கஷ்டநஷ்டங்களை (ப்பார்ப்பின்) நவில ஆயிரம் நாவுள்ள ஆதிசேஷனாலுமியலாது. தட்சிணதேசங்களில் அனேகமாகப் பெண்கள் பிறக்கவேண்டாம். பிள்ளைகளே பிறக்கட்டுமென்று ஈசுவரனை நல்லொழுக்கத்துடன் ஆலயம் சென்று தொழுவதுமுண்டோவென்று இவ்விஷயங்களால் ஊஹிக்கவேண்டியதாயிருக்கின்றது. பிதா தன்கு[ழந்தை]லத்திற்கோர் பெண்குழந்தை பிறந்து விட்டால் "குலத்திற்கோர் கோடாரி" என்று நிச்சயமாய் கருதுகிறார். பெண்குழந்தைகளின், தவிழ்ந்து விளையாடும் விளையாட்டுக்களையும், மழலைச்சொற்களையும் இன்னுமரிய பாலலீலைகளையும் கண்ணுற்றும் செவியுற்றுமுள்ள பெற்

ஞேரின் செந்தாமரைமுகங்கள் மழைபெய்துகொண்டும் வெய்யிலடித்துக்கொண்டுமிருக்கும் தருணத்திலுள்ள தாமரைகளின் அவஸ்தையை அனுபவிக்கின்றன. தன்பெண்கள் எட்டாவது வயதிலேயே தனிகர்கள் அனேகமாகப்பெண்களை கன்னிகாதானம் செய்துகொடுக்கின்றனர். ஏழைகளோவெனின் தமக்குரிய சம்பந்தத்தை தேடுகிறார்கள். அவ்விதஸம்பந்தத்தைக் கண்டு பிடித்தாலும் அவர்கள் கேட்பது-ரூபாய் ஆயிரமே.

[இன்னும் வரும்.]

K. M. சுப்பிரமணியசாஸ்திரிகள்.

ஆசாரியனும் தேவனும்.

(உருசு-வது பக்கத்தொடர்ச்சி.)

பிராசீன தர்மத்தையே பரிபாலனம் செய்யவேண்டுமென்றால் முற்காலத்தில் தேவஸ்தானங்களில் தான் பெரிய புஸ்தகசாலை உண்டு. அவ்விதம் புஸ்தகசாலை ஏற்படுத்தலாம். அர்ச்சகர்கள் 20-வயதிற்கு மேற்பட்டு ஆசார்யாபிஷேகம் பெற்ற பிறகுதான் கோவிலில் அர்ச்சனை செய்யலாம். அதுவரை தேவஸ்தானத்திற்கு வேண்டியவளவு ஆகமம் படித்துத்தானாகவேண்டும். ஆசார்யாபிஷேகம் செய்துகொள்ளாத 20-வயதுக்குக் கீழ்ப்பட்ட அர்ச்சகர்கள் கர்ப்பகிருஹத்தில் நுழையக்கூடாது. கோவிலில் நுழையும் அர்ச்சகர்கள் எப்போதும் மடியாய் ஆசாரமாய் இருக்கவேண்டும். அபிஷேகம் தீபாராதனை முதலிய உபசாரங்கள் ஆகமத்திற்கூறியவாறு கொஞ்சமும் வழுவாமலே நடை பெறவேண்டும், அவர்கள் வெற்றிலை புகையிலை முதலியன தரித்துக்கொண்டு கோவிலில் நுழையக்கூடாது. மதங்களைப் பற்றி ஆங்காங்கு உபன்யாஸம் செய்வதன் நிமித்தம் தக்கபண்டிதர்களை நியமிக்கவேண்டும். கோயில் மடப்பள்ளியில் வேலை

செய்பவர்கள் அனுசாரமாய் இருக்கவே கூடாது. நிவேதனங்களைக் கொண்டுவந்து போகும்போதும் கூட்டத்தை நன்குவிலகச்செய்து ஒருவர்மேலும் படாமலே போகவேண்டும். அவர்களும் வெற்றிலை முதலியன தரித்துக்கொண்டு உள்ளே வரக்கூடாது. கோவிலில் சட்டைபோட்டுக்கொண்டு சுவாமிதரிசனத்திற்கு ஜனங்கள் வராமலிருக்கும்படி உபன்யாஸம் முதலியவைகளாலேயே திருத்தவேண்டும். இவ்விதமெல்லாம் திருத்தினால் தேவனது ஸான்னித்யம் உடனே ஏற்படும். லோகத்திற்கு க்ஷேமம் பெறுகும். பஞ்சம் விலகும். ஒரு குறைவும் ஏற்படாது. இவைகளை நடக்கும்படி செய்ய நம்மால் முடியாதா?

अर्चकस्य तपोयोगादर्चनस्यातिशायनात्।
आभिरूप्याच्च बिंबानां देवस्सान्निध्यमृच्छति ॥

அர்ச்சகனுடைய தபஸ்ஸினாலும் அர்சனையின் மேன்மையாலும் பிம்பத்தின் அழகான அமைப்பாலும் தேவன் ஸான்னித்தியம் பெறுவான் என்று சாஸ்திரமும் முழங்குகிறது. இந்தவழியெல்லாம் விட்டுவிட்டு பணத்தை உன்னிஷ்டப்படி செலவழியாமல் என் இஷ்டப்படி செலவழிக்கவேணுமென்பதற்கு சட்டமா? இது தர்மமா? இப்படிக்கட்டுப்பாடு செய்யும்போது அந்தந்த தேவஸ்தானங்களுக்கு காணிக்கை முதலான மேல்வரும்படி வருமா? இதையெல்லாம் தெரிந்துகொண்ட ஜனங்கள் இனிமேல் கோவிலுக்குக் காணிக்கை செலுத்தக்கூடாது. எல்லாம் சர்க்கார் எடுத்துக்கொள்ளுகிறார்களாம் என்று சாதாரண ஜனங்கள் நினைக்கும். ஆகவே வெளிவரும்படி நாளடைவில் குன்றிடவே கிராமம் முதலிய சொந்த சொத்தின் வரும்படியிலிருந்து கவர்ண்மெண்டாரால் நியமிக்கப்பட்ட தர்மாதிகாரிப் பிரபுக்களுக்கு மாதம் ஒன்றுக்கு 3000 4000 ரூபாய் சம்பளம் கொடுத்ததுபோக பாக்கியிருப்பதில் கோவில் படித்தனம் நடக்கவேண்டும். பிரதிவருஷமும் மிச்சமும் காட்டவேண்டும். அப்படி மிச்சம் காட்டாவிடில் அந்த அதிகாரி சரியான அதிகாரியாய் ஒப்புக்கொள்ளப்படமாட்டார். ஆஹா என்ன என்ன

அனர்த்த பரம்பரை வரப்போகிறதோ கலிமகாராஜனே! உன் ஆக்ஷி ஆரம்பிக்கும்போதே மிகக் கடுமையாய் இருக்கிறதே? இது உன்பாலலீலையா? இருக்கட்டும் உன்னை நினைக்கும் போதே நடுங்குகிறது.

वृश्चिकः पुच्छलग्नेन विषेण यदि दारुणः ।
कलिना दशमांशेन सर्वो भवति दारुणः ॥

தேளுக்குத் தன் கொடுக்கில் இருக்கும் அல்பவிஷத்தால் அந்தத் தேளைப் பார்க்கும்போதே எப்படி நடுங்குகிறதோ அது போல் கலியில் 10-ல் ஒரு பங்கு பின்பாதியில் வரப்போகும் கெடுதலால் கலியென்றாலே நடுங்குகிறதென்றார். இப்படியெல்லாம் நமக்கு புத்திதோன்றுவதும் நேருவதும் காலவியல்பென்றாலும் நாம் சும்மா இருக்கக்கூடாது. நாம் கூடுமான வரையில் அதைத்தடுக்க முயலவேண்டியது நியாயமாதலால் அதன்படியே இப்போது சட்டமாகப்போகும் இதைப்பற்றி நம்காருண்யகவர்ண்மெண்டிடத்தில் முறையிட்டுக்கொள்வோம். நமது மஹாராணியாரவர்கள் நமக்கு ஆதியிலேயே உங்கள் மதவிஷயத்தில் நாங்கள் தலையிடுகிறதில்லையென்று அபயப் பிரதானம் செய்திருக்கிறார்கள். அதையே பரம உபதேசமாய்க்கொண்டு அந்த வாக்கையே முதலில் உச்சரித்துக்கொண்டு நமது எட்வர்டு சக்கிரவர்த்தியும் நமது ஜார்ஜ் மன்னரும் பட்டமடைந்தார்கள். இன்னும் அவர்கள் ஸந்ததி பரம்பரையும் அவ்விதமே பட்டமடைவார்கள். ஆகவே அந்த வாக்கையே பரிபாலிக்கும் நமது சக்கரவர்த்தியினிடத்தில் முறையிட்டால் நமது குறைகள் நீங்கும். இந்த உபதேசத்தை ஞாபகப்படுத்தியே நாம் இதற்குமுன் வந்த பிராமணப் பெண்கள் விவாக சம்பந்தமான சட்டத்தையும் ஒரு ஹிந்து எல்லா ஜாதி ஸ்திரீகளையும் விவாகம் செய்துகொள்ளலாமென்று கொண்டுவந்த சட்டத்தையும் சட்டமாகக் கூடாதென்று கேட்டிருக்கிறோம். இப்போது வந்திருக்கிற இந்தச் சட்டமோ முன்னிரண்டையும் விட மிகப் பெரியதென்று சொல்லவேண்டியதில்லை. ஆகவே ஆஸ்திகர்

களே! இது ஒரு சமயம் அவஸரமாய்ச் சட்டமாய்விட்டா லும் நாம் கவர்ண்மெண்டாரிடம் மன்றாடிக்கேட்டுக்கொண் டால் அவர்கள் நமக்கிறங்கி அதை ரத்து செய்வார்கள். எல் லாம் வல்ல இறைவனே நமக்குத் துணை.

M. N. சுப்பிரமணியசாஸ்திரிகள்.

புராணக் கதைகளும் அவற்றின் லக்ஷியங்களும்

(வித்யாவிஹாரிணியிலிருந்து)

ஆத்மயக்ஞம் செய்து பலனை யடைந்தவர்களே இந்தியா வில் முனி சிரேஷ்டர்களெனப்படுவார். அவர்களுடைய உபதே சங்களே நமக்கு முக்தி தரக்கூடியவை, ஏனெனில் அவர்கள் எல்லாப் பூதங்களுக்கும் ஹிதம் செய்வதையே தங்களுக்கு விநோதமாகக்கொண்டவர்கள். வயது, ஞானம், சீலம் முதலி யபல அம்சங்களிலும் மனிதர்களில் பெரும்பாலார் கேவலம் குழந்தைகளாயிருப்பதில், இம்மாதிரிப் புண்ய புருஷர் அப்போ தைக்கப்போது நமது மத்தியில் அவதரித்து, நமக்கு நற்புத்தி புகட்டி வந்ததினால் தான் இந்தியர்களுக்கு உள்ள பெருமை யெல்லாம் கூடி வந்திருப்பது. அவ்வாறு நடந்ததாகப் புரா ணங்களில் சொல்லியிருக்கும் பலகதைகளில் இரண்டொன்றை யிங்கு உதகரிக்கிறோம். அபிமானிகளுக்கும் அது திருப்திகர மாகுமென்று நம்புகிறோம்.

துறவியும் வேந்தனும்.

'துறவிக்கு வேந்தன் துரும்பு' என்று ஒருவசனமுண்டு. ஆனால் 'துறவி' என்பவனுக்கு என்ன லக்ஷணமென்று விசா ரிக்கையில், காவிவஸ்திரம், சுரைக்குடுக்கை முதலியவேஷங்கள் மட்டுமே துறவி லக்ஷணமல்லவென்று பின்வரும் கதையால்

விளங்கும். இம்மாதிரிக்கதைகள் எத்தனையோ நாம் கேட்டிருக்கலாமாகிலும் இது வெகு புராதனமாதலால் நாம் இதை விசேஷித்து மரியாதைகாட்டுவோமாக.

முன்னொரு காலத்தில் ஹிமவத் பருவதச்சாரலில் ஒரு சிறுவன் பிரமசரிய விரதமேற்கொண்டு, குருவாகிய மகரிஷிக்கு பணிவிடைசெய்து, அவரிடத்தில் சாஸ்திரப்பயிற்சியடைந்து வருகையில், ஒருநாள் உபநிஷத்தில் ஒரு பாவத்தில், "யாவனொருவன் ஈசுவரனைக்காண விரும்புகிறானோ அவன் ஜீவனை ஈசுவரனுடன் சேர்ப்பதாகிய யோகத்தைச் சாதனஞ்செய்யக்கடவன்" என்று வருணித்திருப்பதைப் படித்தான். அது இன்னவிதமென்று விளங்காததால், சிறுவன் குருவை வணங்கி அதற்குப் பொருள் கேட்க, அவரும், "அப்பா அதற்குப்பொருள் சாமான்னியருக்குவிளங்குவதில்லை. எனக்கும் அப்படியேதான். ஆதலால் நீ ஜனகராஜரிஷி பாரத வருஷத்தை யாண்டு வருபவரிடம் போய்த்தெரிந்துவா. அவரை யொழித்து வேறொருவருக்கும் இதை விளக்குவது சாத்யமன்று," என்றார். சிறுவனும் அப்படியே யாகட்டுமென்று சொல்லிவிடை பெற்றுப்போனான்.

வழியில் ஓர்ஆலமரத்தடியில் ஒருவர் ஜடாமகுடதாரியாய்க் கண்களை மூடிக்கொண்டிருக்கவும், கைகால்களை யசைக்காமல் கல்லைப்போல் உட்கார்ந்திருக்கவும் கண்டு வியப்படைந்தான். அவருக்குச் சேதனமென்பது கிடையாமலிருந்ததால், அவருடைய தலையில் குருவிகள் கூடு கட்டிக்கொண்டு வாழ்ந்தன. இதைப் பார்க்கவே சிறுவன் ஆச்சரியமடைந்து, "இவர் யாரோ புண்ணிய புருஷன். இவர் செய்துவரும் யோகத்தைப் பார்த்தால் ஜீவனை ஈசுவரனுடன் நிச்சயமாய்ச் சேர்த்துப் பலனடைந்திருக்கவேண்டும். ஆதலால் இவரிடம் உபதேசம் பெறுவே" னென்று நிச்சயித்து அவர் மூடிய கண்ணைத் திறக்குமளவும் எதிரே நின்று காத்திருக்க, அவரும் தற்செயலாய்க் கண் விழித்துப் பார்த்தார். சிறுவன், "ஓ புண்ணியமூர்த்தி, தாங்கள் அப்பியசித்த யோகத்தை எனக்கும் விளக்கிச் சித்தியடையச் செய்யவேண்டும்," என்றான்.

அதற்கு அவர், "அப்பா, எனக்கு ஒரு சித்தியும் ஆக வில்லை. கண்ணை மூடிக்கொண்டும், கல்லைப்போல் அசைவில்லா மலும் உட்கார்ந்திருப்பது மெய்தான். ஆனல் இந்தச்செப்பிடு வித்தையைக் கண்டு மயங்காதே. இதற்கும் நீ கேட்பதற்கும் வெகுதூரம். ஆதலால் சித்தியடைந்தவரைத் தேடி உன் சந்தேகம் தெளி" என்ருர்.

சிறுவன் அவரை வணங்கிப் போகையில் நாரதர் ஒருசோலையில் வீணையை வாசித்து ஹரிநாமஸங்கீர்த்தனம் செய்து கொண்டிருந்தார். அவரைப்போய் வழிபட்டுத் தன் சந்தேகத்தைச் சொல்ல, அவரும், "அப்பா அது வெகு சுலபமாயிற்றே. பிரேமையென்னும் பாசத்தினல் ஹரியைக் கட்டிப்பிடிக்கலாம். பிரேமையென்னும் சாவியைக் கொண்டுதான் மோக்ஷமென்னும் கோட்டைக்கதவைத்திறக்க வேண்டும். ஹரிநாம சங்கீர்தனம் யார் செய்கிருரோ அவரைப் பசுவானது தாயியோடும் கன்றைத் தொடர்வது போலத் தொடர்ந்து ஹரியானவர் போகிருர்," என்ருர் "ஆமாம் மகரிஷியே, தங்கள் பிரவசனம் சரிதான். ஆனல் இந்தப் பிரேமை யெனக்குக் கிடைப்பதெப்படி? அதை யெவ்வாறு புஷ்டியாக்குவது? தெளியச்சொல்லவேண்டும்" என்று சிறுவன் கேட்க, நாரதரும் தற்காலத்தில் அரைகுறையாய்ப்படித்து, வேதாந்த வித்தியா பாரங்கதர்களென்று பெயரிட்டுக்கொண்டு, பதர்ப்பேச்சைச் சரமாரியாக வருஷிக்கும் சிலரைப்போல, "ஏதாகிலும் ஹரியினுடைய மூர்த்தியை மனதிலிருத்தி, அதனிடத்தில் பிரேமையுடன் தியானித்துப் பாடி வந்தால், எல்லாம் கைகூடு" மென்ருர். சிறுவனுக்கு விளங்கவில்லை. ஆதலால் நாரதரை நமஸ்கரித்துவிட்டுச் சிறுவன் தன்வழிபோய் மிதிலைசேர்ந்து, மகாராஜனுகியும், மகரிஷியாகியும் விளங்கும் ஜனகரைத் தரிசித்துத்தன் காரியத்தை விளக்கினுன்.

(இன்னும் வரும்,)